**இபலோகம பிரதேச சபையி - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இபலோகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்தஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில்உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் இபலோகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்தஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க, பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகைகள் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொள்வனவு செய்த ஆண்டில் சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்படாமையும் கொள்வனவு செய்த திகதியை கவனிக்காது அகற்றும் ஆண்டிக்கே பெறுமானத் தேய்வு செய்வது சபையின் கொள்கையான போதும் 2022 ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.118,728 அலுவலக உபகரணங்களிற்காக ரூபா.14,841 பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு இருந்தது. | ஏற்றுக்கொள்வதாக. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய மொத்த பெறுமானத் தேய்வு ரூபா.24,364,832 ஆக விரிவான வருமான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா.24,549,636 ஆக ரூபா.184,805 கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | - மேற்படி - |
| (இ) | 2021 ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா.1,909,230 ஆன கட்டிடமொன்றிற்காக 2022 ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா.47,731 ஆன போதும் அது ரூபா | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 86,154 ஆக ரூபா.38,423 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மின்சார பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் இருப்பிற்குள் உள்ளடங்கும் போல்ட் ஆணி (பிரகட்) ஒன்று ரூபா 220 வீதம் 139 இனை கொள்வனவு செய்திருந்த போதும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று இறுதி இருப்பின் பெறுமானம் ரூபா.35,445 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள தொலை தொடர்பு கோபுரங்களிற்காக 2022 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய ரூபா.42,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மீளாய்வாண்டிற்குரிய வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு சேர்க்கப்பட்ட தளபாடங்கள் ரூபா.263,355 ஆன போதும் அட்டவணை பிரகாரம் அது ரூபா 313,355 ஆனதில் ரூபா.50,000 ஆன வித்தியாசமொன்று ஆனது. | ஏற்றுக்கொள்வதாக. | அட்டவணைகளுடன் துணை அறிக்கைகள் இணங்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று கணக்குகளின் படி பெற வேண்டிய குப்பை வரி வருமானம் ரூபா.3,113,600 ஆக போதும் அட்டவணை பிரகாரம் அது ரூபா.3,224,700 ஆனதில் ரூபா.111,100 ஆன வித்தியாசமொன்று ஆனது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொரோனா தொற்று காரணமாக அறவிட முடியாத மீதிகளை பதிவழித்தலின் கீழ் நிலுவை வியாபார வரி வருமானம் ரூபா.86,600 தொகையை மாத்திரம் பதிவழிக்க சபை தீர்மானமொன்றின் ஊடாக அங்கீகரித்திருந்த போதும் ரூபா.110,800 பதிவழித்திருந்ததால் நிலுவை வியாபார வரி வருமானம் ரூபா.24,200 இனால் குறைவடைந்திருந்தது. | ஏற்றுக்கொள்வதாக. | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டம் | | | |
| (i) | 134 பிரிவு | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களை இனங்கண்டு வெளியிடப்பட்டிடு இருக்கவில்லை. | வர்த்தமானிப்படுத் துவதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற் கு அனுப்பப்பட்டுள்ள தாக. | வீதவரி அறவிடுவதற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும். |
| (ii) | 159 (2) பிரிவு | ரூபா.3,224,700 ஆன நிலுவை குப்பை வரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதா க. | நிலுவை தொகையை அறவிடுவதனை துரிதப்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா.6,900,567 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா.14,729 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 2,962,400 | 4,183,035 | 3,200,395 | 3,525,900 | 2,899,150 | 3,233,290 | 2,197,080 | 2,543,260 |
| (ii) | வாடகை | 9,010,586 | 8,877,828 | 9,211,969 | 1,960,085 | 7,182,083 | 8,480,904 | 7,898,174 | 2,294,226 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 416,350 | 451,550 | 385,050 | 229,500 | 452,100 | 337,450 | 345,000 | 163,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 17,154,000 | 18,435,126 | 17,602,484 | 20,131,132 | 14,781,000 | 13,205,375 | 17,466,364 | 19,298,490 |
| | | 29,543,336 | 31,947,539 | 30,399,898 | 25,846,617 | 25,314,333 | 25,257,019 | 27,906,618 | 24,298,976 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | 2022 திசெம்பர் 31 திகதியன்று வீதவரி மீதி ரூபா.3,221,250 ஆனது. | ரனஜயபுர பிரதேசத்தில் வசிப்பிடத்தை கைவிட்டுச் சென்ற வீடுகளிற்கு தவறுதலாக பில்லிடப்பட்டதால் குப்பை வரி நிலுவை அதிகரித்துள்ளதாக. | முறையாக அங்கீகாரத்தை பெற்று சரியான குப்பை வரி வருமானத்தை இனங்காண வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | சபைக்கு சொந்தமான குத்தகை வழங்க முடியுமான 06 சொத்துக்களிற்காக முதற் சந்தர்ப்பத்திலே விலை மணு சமர்பிக்கப்பட்டிருக்காத போதும் குறைந்த பட்ட விலையை குறைத்து மீண்டும் டென்டர் செய்ய நடவடிக்கை எடுக்காததால் 2022 ஆண்டில் சபைக்கு ரூபா.161,618 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக. | சபைக்கு நட்டங்கள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி பெற வேண்டிய விளம்பர பலகை வருமானம் ரூபா.163,000 ஆனதுடன் அவற்றில் 04 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் ரூபா.67,800 தொகையும் உள்ளடங்கியிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி பெற வேண்டிய தொலைத் தொடர்பு கோபுர வருமானம் ரூபா.42,000 ஆனதுடன் அவற்றில் 04 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து பெறவேண்டிய ரூபா.24,000 தொகையும் உள்ளடங்கியிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

(ஈ) **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.8,969,257 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.8,149,500 கிடைத்திருக்கவில்லை. | நிலுவை தொகை ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதாக. | எஞ்சிய நிலுவை தொகையை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனிம்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா.49,433 ஆன வேலை கடன்படுனர் (மூலதன) மீதியொன்றும் 2017 மற்றும் 2018 ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா.252,948 ஆன 09 கடன்கொடுனர் மீதிகளும், நிலவிய போதும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு அம்மீதியை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 18 திகதி விபத்துக்குள்ளாகியிருந்த சபைக்கு சொந்தமான டிபர் வண்டியை திருத்துவதற்காக 2022 ஆண்டில் ரூபா.306,500 செலுத்தியிருந்த போதும் இலக்கம் 2182/39 கொண்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விதி 14 பிரகாரம் அந்த நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்கண்டு தொடர்பான நடவடிக்கை எடுத்திருக்கவில. | ஒழுக்காற்று கட்டளை கிடைத்த பின்னர் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | ஒழுக்காற்று கட்டளையை விரைவில் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |